உ

# பரமசிவஸ்தோத்திரம்.

சுப்பிரமணியககடவுள்

# அவரூசிப்பத்து.



திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என். சி

உ

# பரமசிவஸ்தோத்திரம்.

காயாமரத்தின் கனியாகி கனியிற் கொட்டையுள்ளாகித், தாயாயீரேழுலகுக்குந் தந்தையுமான தயாபரனே, யாயாமறைநூல் தனைவகுத்த வரனேயுந்தனடைக்கலங்காண், பேபாயெங்கள் பெருமானே பித்தாயென்னையாளாயோ. (1)

அரவம்பணியா யணிவோனே வரனே யடியார்க்கெளியோனே, மருவின்கொழுந்தின் வாசனைபோல் மாயாமருளா மகதேவா, குருவைச் சிஷன்தனைத்தேடி குடிகொண்டுளத்தி லிருப்போனே, விரவும் பகலு முனைப் புகழ்வேன் யீசாயெனையாளாயோ. (2)

மட்டார்குழலிதனைக்கூடி மாயாவயற்றுக்கிரைதேடி பட்டாங்கடித்துப்பரஞ்சோதி பாதங்காணவேணுமென்றே, கட்டாச்சுரபிசன்றதுபோல் காசினியெங்குந்திரிந்தடியேன், வெட்டாக் சொம்பை யெட்டிநின்றேன் ஈசாயெனையாளாயோ. (3)

வனக்குன்றெடுத்து வளர்த்த பெண்ணை வைத்தாயுந்தனிடப்பாகம், சினக்கும் புலித்தோல் தரித்தோனே சிவனே யெங்கள்பெருமானே, நினைக்கும்பொழுது அடியேன்முன் னிமலாவந்து நில்லாயோ, எனக்குமுனக்கு போகா தீசாயெனையாளாயோ. (4)

கொல்லுங்களிறை யுரித்தோனே குடிகொண்டுள த்தி லிருப்போனே, செல்லுந்தளத்திலிருந்தென்னசிவ னே யடியேனபடமாட்டேன். அல்லும்பகலும் உனைப் புகழ்வே னையாயுந்தனடைக்கலங்காண், இல்லும்பிறப்பு மினிவேண்டே னீசாவெனையாளாயோ. (5)

வருவதும்போவது மினிவேண்டேன் வாழ்வும்வே ண்டேன் புவிவேண்டேன், தருவதெனக்கு வுன்பாதஞ் சர்வஜீவ தயாபரனே, குருவுபதேசம் நீதந்து குடிகொ ண்டுளத்தி லிருந்தபடியே, னருவினையருத்தே யெனையா ண்ட வரனே எளியேன்முன்வாராயோ (6)

நில்லாவாழ்வைச் சதமென்று நெறியானடக்கமா ட்டாமல் நல்லார் பொல்லா ரென்றறியாமல் நமன்போ ல் நடுங்கித்திரிந்தாலும், அல்லார் குழலா ளுமைபாகாவ ரனே யடியார்க் கெளியோனே, எல்லாம்பொறுக்கப்பர முனக்கே யீசாவெனையாளாயோ. (7)

பொங்குகடல்சூழுலகுமெங்கும் புவியிலேழுபுவனமெ ல்லா, மெங்குமுந்தனொளிபன்றோ யிறைவாவெங்கள்பெ ருமானே, அங்கந்தளர்ந்து மிகமெலிந்து.வடியேன்வயற் றுக்கிரைதேடி, யெங்குந்திரிந்துவுழலாம லீசாவெனையா ளாயோ. (8)

பொய்யுமெய்யுந் தானுரைத்துப் புவிமேல் வாழ் வைச்சதமென்று, கையுஞ்சலித்துக்கால் சலித்துக் கர்த் தாவுன்றன் செயலன்றோ, செய்யுந்தொழிலேமெய்யென்

றசிவனேயடியேன் படுவானேன். எய்யுஞ்சிலையுந்தனை யெரிந்த வீசாயெனையாளாயோ. (9)

நெருப்போவுந்தன்திருமேனி நீறேபூசித் திரிவதல்லால், பொருப்போயுந்தனிருப்பிடந்தான் புவியீரேழுபுவனமன்றோ, தருப்போல் கிளைத்துத் தழைத்துநின்றாய், சகலசீவசெந்துக்குளே இருப்பாயெந்தனுளந்தனிலே யீசாயெனையாளாயோ. (10)

பங்குமனிதரெலும்பையெல்லாமார்மேல்நிறையப் பூண்டுகொண்டு, அங்கப்வளர்க்கப் படும்பாடு யார்தானறியப்போரார்கள், சங்குகரத்தில்மழுமானுந் தரித்தசூலம் பிடித்தெதிரே, யெங்குந்திரிந்து வுழலாம வீசா யெனையாளாயோ. (11)

கல்லாதவனு யிருந்தாலும் கனத்தபாவஞ் செய்தாலும் பொல்லாதவனு யிருந்தாலும் புலையுங் கொலையுஞ் செய்தாலுஞ், செல்லாவாசல் தனைச்சென்று சிவனேயுன்னை மறந்தாலும், எல்லாம்பொருக்கக் கடனுனக்கே யீசாயெனையாளாயோ 13)

படுவேன் பாடு டச்சொன்னல் பாரஞ்சுமக்கப்பரமுனக்கே, விடுவேனுசை விடச்சொன்னல் விதியின்பயனதன் பயனன்றோ, சுடுவேன்பாவந்தனையின்று சுடரேயுந்தனொளியாலே, யிடுவேன் வழக்குநானுன்னை யீசாயெனையாளாயோ. (13)

முற்றிற்று.

உ

# அவனுசிப்பத்து.

---(*)---

வற்றாதபொய்கை வளநாடுகண்டு மலைமேலிருந்த
குமரா, வுற்றாரெனக்கு வொருபேருமில்லை வுமையாள்
தனக்குமகனே, முத்தாடைதந்து வடியேனையாளுமுரு
கேசரெந்தன் மனத்தே, வித்தாரமாக மயில்மீதிலேறி
வரவேணுமென்றனருகே. (க)

ஆலால முண்டோன் மகனாகிவந்தனடியார்தமக்கு
முதல்வி, யாளூரனுண்டு கனிவாய்த்திரந்து பயனஞ்செ
ழுத்தைமறவேன். மாலானவள்ளிதனைநாடிவந்துவடிவா
கினின்றகுமரா, மேலானவெற்றி மயில்மீதிலேறி வரவே
ணுமென்றனருகே. (2)

திருவாசல்தோறுமருள்வேதமோத சிவனஞ்செழு
த்தைமறவேன், முருகேசரென்று மடியார்தமக்கு முத
லாகிநின்றகுமரா, குருநாதசுவாமி குறமாதுநாதர் கும
ரேசரென்றபொருளே, மறவாமல்வெற்றிமயில்மீதிலேறி
வரவேணுமென்றனருகே. (3)

உதிரந்திரண்டு பனிவூரலுண்டுருவாசல் தேடிவரு
முன், கதிபோலெழுந்த திருமேனிநாதர்கடைவீடுதந்து
மருள்வாய்; முதிரஞ்சிறந்தவயல்வீறுசெங்கை வடிவே
லெடுத்தகுமரா, யதிராய்நடந்து மயில்மீதிலேறி வரவே
ணுமென்றனருகே. (4)

மண்ணுடமீசன்மகனுமாயுந்தன் மலைவீடுதந்துமருள்வாய், வண்டேரல்பாயும் வயலூரில்செங்கைவடிவேலெடுத்தகுமரா, நன்றாகவந்து யடியேனையாண்டு நல்வீடுதந்தருகனே, கொண்டாடி வெற்றி மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. (5)

நீலஞ்சிறந்த குறமாதுவள்ளிநின்பாகம்வைத்தகுமரா, காலனெழுந்து வெகுபூலைசெய்து கயறுமெடுத்துவருமுன், வேலும்பிடித்து வடியார்தமக்கு வீராதிவீரருடனே, சாலப்பரிந்துமயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே (9)

தலைகட்ட நூலின் நிழல்போலநின்று தடுமாறிநொந்து அடியேன், நிலைகெட்டுயானும் புவிமீதில்நின்று நெடுமூச்செரியவிதியோ, மலைதொட்ட செங்கைவடியேற்கடம்பா வடிவேலையாளு முருகா, மலையேறிமேயுமயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே (7)

வண்டுண்டுபூவில் மதுவூரல்பாயும் வயலூரில்செங்கைவடிவேல், கண்டொன்றுசொல்விதிரிவார்கள் வாசல்கடனென்றுகேட்கவிதியோ, வண்டேறுபூவிலிதழ்மேவுவள்ளி தெய்வானைக்குகந்தவேலா, நன்றென்றுசொல்லி மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. (8)

விடதூதரோடி வரும்போதுவும்மை வெகுவாகநம்பினேனே, குறமாதுவள்ளி யிடமாகவைத்து மயிலேறிவந்தசெல்வா, திடமாகசோலை மலைமீதில்வாழும் திரு

மால்தமக்குமருகா, வடமானபழனிவடிவேலுநாதா வரவேணுமென்றனருகே (9)

ஓங்காரசத்தி யுமைபால்குடித்து வுபதேசமுரைத்தபரனே, பூங்காவனத்திலிதழ்மேவும்வள்ளிபுஜமீதிருந்தகுகனே, யாங்காரசூரர் படைவீடுசோர வடிவேல்விடுத்தபூபா, பாங்கானவெற்றி மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. (10)

ஆறுறுமாறுவயதானபோது வடியேன்நினைத்தபடியால், வேறேதுசிந்தைநினையாமலுந்த னுசாரசங்கமருள்வாய், அசுரேசர்போலயெமதூதரென்னை தொட்டோடிகட்டவருமுன், மாறுதுதோகை மயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. (11)

கையாவுன்னை தொழுதேத்தமனது கபடேதுசற்றுமறியேன், ஐயாவுனக்காளாகும்போது வடியார்தமக்குமெளியேன், பொய்யானகாய மறிவேயொடுங்க யுயிர்கொண்டுபோக வருமுன், வையாளியாகமயில்மீதிலேறி வரவேணுமென்றனருகே. (12)

ஏதேதுஜன்ம மெடுத்தனோமுந்தி யிந்தப்பிறப்பிலரியேன், மாதாவுந்தந்தைநீ மாதவன்தனக்கு மருகாகுறத்திகணவ, காதோடுகண்ணை யிருளாகமூடியுயிர்கொண்டுபோகவருமுன், வாதாடிநின்று மயில்மீதிலேறிவரவேணுமென்றனருகே (13)

வேறு.

வருமோநமக்குமொருவாராதபத்து வஞ்சனைச் குணியங்கள், வைப்புகுணமேவலும் வைத்திட என்மே

லொரு வஞ்சகநினைத்தபோதும். கறுவே ரறுத்தவளைக் கண்டித்துத் தெண்டிக்க கர்த்தனே யுனைநம்பினேன் காலனும் பாசம்விட்டோலமிட் டோடவே கதிர்வேலெடுத்துவந்து, அன்புடனடியன்மே லணுவளவு ]வாராமலாதறித்தெனையாளுவாய், ஆலவிஷ முண்டநிட பாலனேயசுரர்குல வேரோடறுத்தகுமரா, சுருதிமுதல் வேதமும்சற்றுமெய்ஞ்ஞானங்களும் தேடுதற் கரிதானதென்பழனிமலையில்வாழும், தேவாதிதேவனே யாவர்க்கு மேலான தெண்டாயுதக்கடவுளே. (14)

அத்திமுகனுக்கிளைய சுத்தனே நித்தனே யானைமீதேறுபரனே, மைசனே மெய்யனே யுய்யவழி யறிகிலேன் அரகராமுருகவேலே சத்திசிவபாலா வருள்சண்முகத்தேவனே சரவணபாவநந்தனே, சாலோக முதலறிய பதவிதருசெல்வமே தண்கஞ்சமலர்தாளனே நித்திய கல்யாணகுண முத்தர்பணி யையனே நிலையற்ற பாவியநிலும், நிர்மூடனுகையாற் செய்குறைகநீக்கியே நீரென்னையாளவேண்டுஞ், சித்திபுரிவல்லதிரு, மாலின்விழி மருகனே தேவர்க்குமிகவறியோனே, தங்குமருள்சிங்காரவடிவேலனே. (15)

ஆக பாடல்-உஅ

முற்றிற்று